தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 22, சுபானு – திருவள்ளுவர் ஆண்டு 2035

2004 பிப்ரவரி 5, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"இன்பம் விழையான் வினைவிழைவான் தன்கேளிர்
துன்பம் துடைத்தூன்றும் தூண்"

தன்னலம் விரும்பாமல், தான் மேற்கொண்ட செயலை நிறைவேற்ற விரும்புகின்றவர் தன்னைச் சூழ்ந்துள்ள சுற்றத்தார், நண்பர்கள், நாட்டு மக்கள் ஆகிய அனைவரின் துன்பம் துடைத்து, அவர்களைத் தாங்குகிற தூணாவார்.

1. இரங்கற் குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினர்களான திருவாளர்கள் எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் 17–9–2003 அன்றும், ஏ.டி. கருப்பையா அவர்கள் 6–11–2003 அன்றும், க. கந்தசாமி அவர்கள் 15–11–2003 அன்றும், தி. சுப்பிரமணியன் அவர்கள் 6–12–2003 அன்றும், ஆர். நாகசுந்தரம் அவர்கள் 16–12–2003 அன்றும், ஏ.எம்.டி. நாச்சியப்பன் அவர்கள் 17–12–2003 அன்றும், ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் 2–1–2004 அன்றும், கே. சகாதேவ கண்டர் அவர்கள் 1–2–2004 அன்றும் மறைவுற்றதைப் பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. எம். கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேராவூரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை நன்கு பணியாற்றியுள்ளார்.

[பேரவைத் தலைவர்] [2004 பிப்ரவரி 5

திரு. ஏ.டி. கருப்பையா அவர்கள் வால்பாறை (செ.வ.) தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1980 முதல் 1984 வரை சிறந்த முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. க. கந்தசாமி அவர்கள் உசிலம்பட்டி தொகுதிக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 13–9–1971 முதல் 1976 வரையிலும், மீண்டும் ஆண்டிப்பட்டி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரையிலும் சீரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. தி. சுப்பிரமணியன் அவர்கள் ஆண்டிமடம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1977 முதல் 1980 வரை செவ்வனே பணியாற்றியுள்ளார்.

திரு. ஆர் நாகசுந்தரம் அவர்கள் திருச்சிராப்பள்ளி–2 தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை சிறப்பான முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ஏ.எம்.டி. நாச்சியப்பன் அவர்கள் திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1971 முதல் 1976 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் அவர்கள் அவிநாசி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 17–6–1970 வரை நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. கே. சகாதேவ கண்டர் அவர்கள் தண்டராம்பட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, 1967 முதல் 1971 வரை பாராட்டத்தக்க வகையில் பணியாற்றியுள்ளார்.

இம்முன்னாள் உறுப்பினர்கள் மறைவினால் அவர்களை இழந்து தவிக்கும் அவர்கள் குடும்பத்தினருக்கு இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும்

தெரிவித்துக்கொள்கிறேன். மறைந்த இப்பெரியவர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

2. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 1, திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்.*

1—

மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள்

***23268—திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**

மாண்புமிகு சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வட்ட அளவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் அமைப்பது குறித்து அரசு பரிசிலனை செய்யுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார், சட்டம், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் மின்சாரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வட்ட அளவில் மாவட்ட உரிமையியல் நீதிமன்றங்கள் அமைக்கும் கருத்துரு ஏதும் தற்போது அரசின் ஆய்வில் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு, இருக்கையில் இல்லை.